**தீயணைப்பு-மீட்புபணிகள் துறை, திண்டுக்கல் மாவட்ட அலுவலர், செயல்முறை ஆணைகள்:**
**பிறப்பிப்பவர்:- திரு. த.வெங்கட்ரமணன், பி.எஸ்.சி., எம்.ஏ., மாவட்ட அலுவலர்,**
**திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல்**

ந.க.எண்: 440/ஆ/2024 நாள்:-02.02.2024
ப.ஆ.எண்: 30/2024

பொருள்: பணியமைப்பு - தீயணைப்பு - மீட்புபணிகள் துறை - திண்டுக்கல் மாவட்டம் இளநிலை உதவியாளர் திரு.ச.சிவனேசன் என்பவரின் தற்காலிக பணியினை - இப்பணியாளர் பணியேற்ற நாள் 18.10.2023 முதல் - பணி வரன்முறை செய்து ஆணைகள் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1) 01.02.1962 தேதியிட்ட அரசாணை (பொதுத்துறை) எண்191
2) 11.10.2023 தேதியிட்ட தீயணைப்பு - மீட்புபணிகள் துறை இயக்குநர் அவர்களது குறிப்பாணை ந.க.எண்: 15782/ஆ1/2022.
3) 18.10.2023 தேதியிட்ட ஈரோடு மாவட்ட அலுவலரின் செயல்முறை ஆணை ந.க.எண்: 11558/ஆ/2023

******

**ஆணைகள்:**

பார்வை 2ல் காணும் இயக்கக குறிப்பாணையின் படியும் மற்றும் 2022 ஆண்டுக்கான காலியிட மதிப்பீட்டின் படி தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV பணிகள் மூலம் தேர்வு செய்யப்பட்டு ஈரோடு மாவட்ட அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதன் படி பார்வை 3ல் காணும் ஈரோடு மாவட்ட அலுவலரின் செயல்முறை ஆணையின்படி இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்து 18.10.2023 முதல் பணியேற்று பணிபுரிந்து வரும் இளநிலை உதவியாளர் திரு.ச.சிவனேசன் என்பவரின் அனைத்து அசல் ஆவணங்களையும் பரிசீலனை செய்து பார்வை 1ல் காணும் அரசாணையின் படியும், மற்றும் பார்வை 2ல் காணும் இயக்கக குறிப்பாணை பத்தி 5ல் வழங்கப்பட்ட அறிவுரைகளின் படி கீழ்கண்ட நிபந்தனைக்கு உட்பட்டு, பணி நியமனம் செய்யப்பட்டடார்.

"The Regularisation is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras/ Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in Combined Civil Services Examination -IV (Group -IV)".

இளநிலை உதவியாளர் திரு.ச.சிவனேசன் என்பவரின் இளநிலை உதவியாளர் பணியினை மேற்காணும் நிபந்தனைக்குட்பட்டு 18.10.2023 முதல் வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது. இவ்விவரம் பணியாளரது பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு இவ்வாணையின் நகல் இவரது பணிப்பதிவேட்டில் சேர்க்கப்பட்டுள்ளது என ஆணையிடப்படுகிறது.

2/2/2024

மாவட்ட அலுவலர்
தீயணைப்பு-மீட்புபணிகள் துறை
திண்டுக்கல் மாவட்டம்
திண்டுக்கல்

பெறுநர்: திரு.ச.சிவனேசன், இளநிலை உதவியாளர்,
மாவட்ட அலுவலர் அலுவலகம்,
தீயணைப்பு மீட்புபணிகள் துறை,
திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல்.

நகல்: இயக்குநர், தீயணைப்பு மீட்புப்பணிகள் துறை, சென்னை-8.
(தகவலுக்காக பணிந்து அனுப்பலாகிறது)

நகல்: இணை இயக்குநர், தீயணைப்பு மீட்புப்பணிகள் துறை, மேற்கு மண்டலம், கோவை-18.
(தகவலுக்காக பணிந்து அனுப்பலாகிறது)

நகல்: ப.ஆ.புத்தகம்